**செய்தி வெளியீடு எண்: 38** **நாள்: 19.01.2013**

## கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்
## 42வது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆணைக்கிணங்க, கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான 42–ஆவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், தமிழ்நாடு – ஆந்திர மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் அளவில், 19.01.2013 அன்று காலை 09.30 மணிக்கு சென்னையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் தலைமைச்செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர்; பொதுப்பணித்துறை செயலாளர்; நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர்; சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர்; காவேரி தொழில்நுட்பக் குழுத்தலைவர்; நீர்வள ஆதாரத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர்; மற்றும் நீர்வள ஆதாரத்துறை சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர், ஆகியோர் பங்கேற்றனர். ஆந்திர மாநிலத்தின் சார்பில் தலைமைச் செயலாளர், பாசனம் & பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்ட சிறப்பு தலைமைச் செயலாளர்; பாசனம் & பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்ட முதன்மைச் செயலாளர், மற்றும் தெலுங்கு கங்கா திட்டத் தலைமைப் பொறியாளர் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் சார்பில் கீழ்க்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது:

(1) ஆந்திர–தமிழக மாநிலங்களுக்கிடையே 18.4.1983 அன்று உருவாகிய ஒப்பந்தப்படி, சென்னை மாநகரத்தின் குடிநீர்த் தேவைக்காக கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து ஆண்டுதோறும், சூலை முதல் அக்டோபர் மாதம் வரை 8 டிஎம்சி தண்ணீரும் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டிஎம்சி தண்ணீரும் திறந்து விடப்பட வேண்டும்.

(2) கண்டலேறு நீர்த்தேக்கத்தின் மொத்த நீர்க் கொள்ளளவான 58.6 டி.எம்.சி. அடிக்கு, இன்றைய தேதியில் (19.01.2013) 17.60 டி.எம்.சி. அடி அளவில் நீர் இருப்பு உள்ளது.

(3) கிருஷ்ணா கால்வாயின் கொள்ளளவான வினாடிக்கு 1000 கன அடி தண்ணீருக்கெதிராக, கண்டலேறு–பூண்டி கால்வாயில், உப்பளமடுகு அருகில் ஏற்பட்டுள்ள உடைப்பு காரணமாக, தற்போது சராசரியாக வினாடிக்கு 150 கன அடி என்ற அளவிலேயே தமிழக எல்லையில் நீர் வரத்து உள்ளது. இந்த உடைப்பின் காரணமாக, சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக, மாற்று ஏற்பாடாக, குழாய்களின் மூலமாக, ஆந்திர அரசு தண்ணீர் அளித்து வருகிறது. இக்கால்வாய் உடைப்பினை விரைவில் சீரமைக்க ஆந்திர அரசைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(4) தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் வந்து சேர வேண்டிய 12 டி.எம்.சி அடிக்கு பதிலாக 3.90 டி.எம்.சி அடி தண்ணீர் மட்டுமே இது வரை வந்து சேர்ந்துள்ளது. ஒப்பந்தப்படி, 12 டி.எம்.சி அடி தண்ணீர் எவ்வித தடையுமின்றி தமிழ்நாடு எல்லையில் வந்து சேரும் வகையில், காளஉறஸ்திக்கு அருகில் உள்ள உப்பளமடுகு பகுதியில், நிரந்தர சீரமைப்புப் பணியினை கோடை காலத்திற்குள்

முடிக்கப்படவேண்டுமென்றும் தேவைப்படின் அதற்கான உதவிகளை தமிழ்நாடு அரசு அளிக்க முன் வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(5) கண்டலேறு நீர்த் தேக்கத்தில் தற்போது போதுமான அளவு நீர் இருப்பு உள்ள நிலையில், அக்டோபர் 2013 வரை எவ்வித தடையுமின்றி, தொடர்ந்து தண்ணீர் அளிக்கப்பட வேண்டும் எனவும், இதன் மூலம் 2012 – 2013 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு கிடைக்கப் பெற வேண்டியதில், எஞ்சியுள்ள 8.24 டி.எம்.சி அடி நீர் மற்றும் 2013 –2014 ஆம் ஆண்டில் அளிக்கப்பட வேண்டிய 12 டி.எம்.சி அடி தண்ணீர் ஆகியவற்றை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

(6) கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து வினாடிக்கு 600 கன அடி தண்ணீர் விடுவிக்கப்பட்ட போதிலும், தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் வினாடிக்கு 150 கன அடி என்ற அளவிலேயே நீர் வரத்து உள்ளது. ஆந்திர எல்லைப் பகுதிக்குள் அனுமதியின்றி நீர் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக, தமிழக எல்லையில் குறைந்த அளவிலேயே நீர் வந்தடைகிறது. எனவே, அனுமதியின்று நீர் எடுக்கப்பட்டுவருவதை கட்டுப்படுத்துமாறும் மற்றும் குறைந்தபட்சமாக வினாடிக்கு 350 கன அடி வரையில் தமிழக எல்லைப் பகுதியில் நீர் வந்து சேருவது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(7) கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபடி, கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான செயலாக்க விதிமுறைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும்.

(8) இரு மாநிலங்களுக்கிடையே, 18.4.1983 அன்று ஏற்பட்ட ஒப்பந்த சரத்துப்படி, கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து ஆண்டு தோறும் வழங்கப்படவேண்டிய நீரில், குறிப்பாக கோடை காலத்தில் அதாவது ஜனவரி முதல் ஏப்ரல் மாதங்கள் வரையில் நீர் வழங்குவதற்கு ஏதுவாக 5 டிஎம்சி அடி அளவுக்கான நீரைத் தேக்கி வைத்து வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆந்திர அரசின் தரப்பில் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டது:

(1) ஒப்பந்தப்படி தமிழகத்திற்கு அளிக்க வேண்டிய நீர் அளிப்பது குறித்த செயலாக்க விதி முறைகள் இதற்கென அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவினால் அளிக்கப்பட்டு அது அவ்வரசின் பரிசீலனையில் உள்ளது எனவும் அதன் விவரம் விரைவில் தமிழ்நாடு அரசிற்கு அனுப்பி வைக்கப்படும்.

(2) தெலுங்கு கங்கா திட்டத்திற்கான தணிக்கை கணக்குகள் விரைவில் சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும்.

விரிவான விவாதத்திற்கு பின்னர், கீழ்க்கண்ட முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன:

(அ) உப்பளமடுகு பகுதியில் மேற்கொள்ளவுள்ள நிரந்தர சீரமைப்புப் பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நீர் வழங்கல் மற்றும் அதனைச் சார்ந்த இனங்கள் குறித்து ஒரு நிரந்தரத் தொழில் நுட்பக் குழு ஏற்படுத்தப்படும். இக்குழுவில், தமிழ்நாடு –ஆந்திர மாநில தலைமைப் பொறியாளர்கள் மற்றும் சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத் தலைமைப் பொறியாளர்

ஆகியோர் இடம் பெறுவர். இக்குழு, சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான வழி முறைகள் மற்றும் அதனைச் சார்ந்த பிற இனங்கள் குறித்து ஆராய்ந்து அவ்வப்போது அறிக்கையினை அரசுக்கு அளிக்கும்.

**அரசு செயலாளர்,**
பொதுப்பணித்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**